# பட்டுக்கோட்டை நகராட்சி

**ஸ்ரீ சார்வரி வருடம் தை மாதம் 16 –ம் தேதி திருவள்ளுவராண்டு 2052 (2021–ம் ஆண்டு ஜனவரி 29–ம் தேதி) வெள்ளிக் கிழமை மதியம் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சென்னுகிருஷ்ணன்,எம்.ஏ.,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**பொருள் எண்..1**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2015–16–ம் நிதியாண்டு முதல் பலமுறை ஏலம் கோரப்பட்டும் வைப்புத்தொகை அதிகம் என தெரிவித்து யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. மேலும் இந்கராட்சியில் குறைந்த அளவு பணியாளர்கள் உள்ள நிலையில் துறை மூலம் வசூல் செய்வதும் சிரமமாக உள்ளது. மேலும் அருகில் உள்ள தேர்வு நிலை நகராட்சியில் பேருந்து கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏல வைப்புத்தொகை ரூ.3,00,000 /–ஆக உள்ளது. இந்நகராட்சி பேருந்து நிலையத்தை விட அளவு பெரியதாகவும் உள்ளது. எனவே இந்நகராட்சி வருவாயை கருத்தில் கொண்டு புதிய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான வைப்புத் தொகை ரூ.3,00,000/– எனவும் தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்பு சான்றிதழ் ரூ,6,00,000–/எனவும் கூடுதல் பொறுப்புத்தொகை ரூ.3,00,000/– எனவும் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு..** | மன்றம் அனுமதி வழஙகலாம்<br>(ந.க.எண்..356/2021/அ2) |

**தீர்மானம் எண்..1 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..2**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஏல இனப்பட்டியல்–2ல் கண்டுள்ள ஓராண்டு குத்தகை இனமான கீழ்க்காணும் பலன் தரும் மரங்கள் 2018–ம் ஆண்டு ஏற்பட்ட கஜா புயலால் மரங்கள் அனைத்தும் வேரோடு சாய்ந்து விட்டதால், மேற்படி இடங்களில் மரங்கள் இல்லாததால், கீழ்காணும் குத்தகை உரிம இனங்களை ஏல இனப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | உரிம இனங்களின் விபரம் |
|---|---|
| 1 | நகராட்சி நாடியம்பாள்புரம் பாடசாலையில் உள்ள பலன்தரும் மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். |
| 2 | அறந்தாங்கி நெடுஞ்சாலையில் நகராட்சி எல்லைக்குள் உள்ள மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். |
| 3 | கண்டியன் தெரு கதவு எண்..216 வீட்டின் முன்புறம் உள்ள தென்னை மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். |
| 4 | நகராட்சி காந்தி பூங்காவில் உள்ள பலன்தரும் மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். |
| 5 | நகராட்சி கண்டியன் தெரு பள்ளியில் உள்ள பலன்தரும் மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். |

| | |
|---|---|
| <u>அலுவலக குறிப்பு..</u> | மன்றம் அனுமதி வழஙகலாம்<br>(ந.க.எண்..356/2021/அ2) |

**தீர்மானம் எண்..2 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

<u>பொருள் எண்..3</u>

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஏல இனப்பட்டியல்–1 ஓராண்டு குத்தகை இனமான கீழ்க்காணும் இனம் 01.04.2015 முதல் பலமுறை ஏலம் கோரப்பட்டும் எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. .எனவே மேற்படி இனத்தை ஏல இனப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | உரிம இனங்களின் விபரம் |
|---|---|
| 1 | நகராட்சி புதிய பேருந்துநிலையத்தில் உள்ள முதல் கட்ட இடத்தில் மனிதர்கள் எடைபார்த்துக்கொள்ளும் இயந்திரம் ஒன்று மட்டும் வைத்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |

| | |
|---|---|
| <u>அலுவலக குறிப்பு..</u> | மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்..356/2021/அ2) |

**தீர்மானம் எண்..3 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

<u>பொருள் எண்..4</u>

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் குத்தகை இனங்களின் உரிமக்காலம் 31.3.2021—ம் தேதியுடன் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்..181, நாள்.. 19.9.2008—ன்படி இவற்றிற்கு மீண்டும் குத்தகை உரிமம் வழங்குவதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கவும், பொது ஏலத்திற்கான நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகளுக்கான அனுமதியும் மற்றும் அச்சுக் கட்டணம் , பொது ஏல விளம்பர கட்டணம் ஆகிய செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. .

**<u>குத்தகை உரிம இனங்களின் பட்டியல் 2021—2024</u>**
**<u>ஏல இனப்பட்டியல்—1</u>**

| வ.எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் இனங்களின் விபரம் | ஏலம்/ஒப்பந்தப் புள்ளி கோர செலுத்தப்பட வேண்டிய பொறுப்புத் தொகைரூ. | தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்பு சான்றிதழ் ரூ. | சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ. | மின் இணைப்புக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்துபோகும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 3,00,000— | 6,00,000— | 3,00,000— | |
| 2. | நகராட்சி புதிய பேருந்துநிலையத்தில் உள்ள பொருள் பாதுகாப்பு அறைக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். (3ம் கட்டம்) | 30,000— | 60,000— | 30,000— | 2500— |
| 3. | நகராட்சி புதிய பேருந்துநிலையத்தில் உள்ள சைக்கிள் ஸ்டாண்ட் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1,25,000— | 2,50,000— | 1,25,000— | 5000— |
| 4. | தனியார் ஆடடிக்கும் தொட்டியில் வதை செய்யும் ஆடுகளுக்கு சீல்வைத்து தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 50,000— | 1,00,000— | 50,000— | 5000— |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | நகராட்சி மினிலாரிகள் நிறுத்துமிடம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். வசூல் செய்துகொள்ளும் உரிமம். (ஸ்ரீ.வெங்கிடுசுப்பையய்யா தேவஸ்தான இடம்) | 50,000– | 1,00,000– | 50,000– | – |
| 6. | நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிவறை மற்றும் குளியலறை கட்டண வசூல் செய்யும் உரிமம். | 2,50,000– | 5,00,000– | 2,50,000– | 5000– |
| 7. | நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள டாக்ஸிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 15000– | 30,000– | 15000– | – |
| 8. | நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்கா சுற்றியுள்ள டாக்ஸிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10000– | 20,000– | 10000– | – |
| 9. | நகராட்சி க்கு எதிப்புறமுள்ள காசாங்குளத்தை சுற்றியுள்ள 4 பகுதிகளிலும் டாக்ஸிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10000– | 20,000– | 10000– | – |

**<u>ஏல இனப் பட்டியல் –2</u>**

**<u>பலன்தரும் மரங்கள்</u>**

**1.4.2021 முதல் ஒப்படைக்கும் நாள் முதல் 31.3.2024 வரை மூன்றாண்டுகளுக்கு**

| வ.எண் | உரிம இனங்களின் விபரம் | ஏலக்கேள்வி கேட்க செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை ரூ. | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | மின் இணைப்புக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | நாடியம்மன் கோவில் சாலை நகராசி எல்லை வரை உள்ள பலன்தரும் மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். | 5000 | –– | –– |

| | | | | |
|---|---|---|---|---|
| **2.** | நகராட்சி சாந்தாங்காடு தலைமை பணிமனையில் உள்ள பலன்தரும் மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். | 5000 | —— | —— |
| **3.** | நகராட்சி ஆனைவிழுந்தான் குளக்கரையில் உள்ள பலன்தரும் மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். | 1000 | —— | —— |
| **4.** | நகராட்சி பெரியகடைத்தெரு நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் உள்ள பலன்தரும் மரங்களின் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். | 1000 | —— | —— |

**ஏல இனப் பட்டியல் –3**

**மீன் பிடி உரிமம்**

**1.4.2021 முதல் ஒப்படைக்கும் நாள் முதல் 31.3.2024 வரை மூன்றாண்டுகளுக்கு**

| வ.எண் | உரிம இனங்களின் விபரம் | ஏலக்கேள்வி கேட்க செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை ரூ. | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | மின் இணைப்புக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| **1.** | நகராட்சி காசாங்குளத்தில் மீன் பிடித்துக்கொள்ளும் உரிமம் | 25000— | **50000—** | 25000— |
| **2.** | நகராட்சி ஆணைவிழந்தான் குளத்தில் மீன் பிடித்துக்கொள்ளும் உரிமம் | 5000— | **10000—** | 5000— |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1.) 2021—2024—ம் ஆண்டிற்கான ஏலநிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| | 2.) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க. எண்.. 356 /2021/அ2) |

**தீர்மானம் எண்..4 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..5</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில் துப்புரவு பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் கோட்டம்-I , II, III ஆகிய பிரிவுகளின் கீழ் உள்ள பகுதிகளில் ஆங்காங்கே தேங்கியுள்ள குப்பை கழிவுகள் , மரக்கிளைகள், ஆகியவற்றை அப்புறப்படுத்தவும் , நைனாங்குளம் உரக்கிடங்கு பகுதியில் ஓர் பகுதியில் சேகரம் செய்திட துப்புரவு பிரிவு கோட்டம் ஒவ்வொன்றிற்கும் ஒரு JCB வாகனம் மற்றும் டிப்பர் லாரி ஈடுபடுத்தி , குப்பை கழிவுகளை முழுவதுமாக அப்புறப்படுத்தி தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) பணியின் அவசியம் அத்தியாவசியம் கருதி மேற்படி பணியினை உடன் மேற்கொள்ளும் பொருட்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 174/2021/இ.1) |

**தீர்மானம் எண்..5 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..6</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி கோட்டம்-I , II, III ஆகிய பிரிவுகளின் கீழ் உள்ள பகுதிகளில் ஆங்காங்கே தேங்கியுள்ள குப்பை கழிவுகள் , மரக்கிளைகள், ஆகியவற்றை அப்புறப்படுத்தவும் , நைநானங்குளம் உரக்கிடங்கு பகுதியில் ஓர் பகுதியில் சேகாரம் செய்திடவும் மேற்கொள்ளும் பணி மேற்கொள்ளும் பணிக்கு 04.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | பட்டுக்கோட்டை நகராட்சி கோட்டம்-I , II, III ஆகிய பிரிவுகளின் கீழ் உள்ள பகுதிகளில் ஆங்காங்கே தேங்கியுள்ள குப்பை கழிவுகள் , மரக்கிளைகள், ஆகியவற்றை அப்புறப்படுத்தவும் , நைநானங்குளம் உரக்கிடங்கு பகுதியில் ஓர் பகுதியில் சேகாரம் செய்திடவும் மேற்கொள்ளும் பணி | ரூ.7,50,000 | எஸ்.கணேசன், பட்டுக்கோட்டை | 0.08% அதிகம் |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 4.70 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே.எடிசன், ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 174/2021/இ1) |

**தீர்மானம் எண்..6 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..7</u>**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு குத்தகை இனம் ஏல இனப்பட்டியல்–1–ல் உள்ள நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகம், காந்தி பூங்கா மற்றும் காசாங்குளத்தை சுற்றியுள்ள 4 பகுதிகளிலும் டாக்ஸிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஒரே குத்தகை இனமாக இருப்பதால் வசூல் செய்யும் உரிமம் ஏலம் போகாமல் உள்ளது . எனவே மேற்படி ஏல இனத்தை மூன்று இனமாக பிரித்து ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

. .

**<u>குத்தகை உரிம இனங்களின் பட்டியல் 2021–2024</u>**

**<u>ஏல இனப்பட்டியல்–1</u>**

| வ.எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் இனங்களின் விபரம் | ஏலம்/ஒப்பந்தப் புள்ளி கோர செலுத்தப்பட வேண்டிய பொறுப்புத் தொகைரூ. | தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்பு சான்றிதழ் ரூ. | சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ. | மின் இணைப்புக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள டாக்ஸிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 15000– | 30,000– | 15000– | – |
| 2. | நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்கா சுற்றியுள்ள டாக்ஸிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10000– | 20,000– | 10000– | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | நகராட்சி க்கு எதிப்புறமுள்ள காசாங்குளத்தை சுற்றியுள்ள 4 பகுதிகளிலும் டாக்ஸிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10000– | 20,000– | 10000– | – |

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு..** | மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்..356/2021/அ2) |

**தீர்மானம் எண்..7 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..8**

பட்டுக்கோட்டை நகராட்சி 33 வார்டுகளைக் கொண்ட தேர்வுநிலை நகராட்சியாகும். இதன் பரப்பளவு 21.83 ச.கி.மீ ஆகும். இந்நகராட்சியில் 24696 குடியிருப்புகளும் மற்றும் 5596 வணிக கட்டிடங்கள் உள்ளன. இந்நகராட்சியில் தினந்தோறும் நகர் முழுவதும் 30மெ.டன் குப்பை கழிவுகள் உற்பத்தி ஆகின்றன. அவற்றில், 17 மெ.டன் குப்பைகள் ஈரக் கழிவுகளாகவும்,13 மெ.டன் குப்பைகள் உலர் கழிவுகளாகவும் கிடைக்கப்பெறுகிறது. இவ்வாறு கிடைக்கின்ற 17 மெ.டன் ஈரக் கழிவுகளை 2 மெ.டன் குப்பைகள் திறன் கொண்ட 5 MCC-க்கும், (நுண் உரக் குடில்) 12 OCC-க்கும் மற்றும் 1 மண் புழு உர செயலாக்க மையத்திற்கும் தினசரி கொண்டு செல்லப்பட்டு உரமாக்கப்படுகிறது. இச் செயலாக்கம் மேற்கொள்ள இந்நகராட்சியின்சுகாதார பிரிவின் கீழ் கீழ்க்கண்ட வாகனங்கள் உள்ளன.

| வ.எண் | நகராட்சி சுகாதாரப் பிரிவில் உள்ள வாகனங்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | JCB | 1 |
| 2. | Pushcart | 12 |
| 3. | காம்பாக்டர் | 2 |
| 4. | டிப்பர் லாரி | 3 |
| 5. | மூன்று சக்கர சைக்கிள் | 18 |
| 6. | இலகுரக வாகனங்கள் (LCV) | 9 |
| 7. | பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) | 17 |

இந்நகராட்சி விவசாயம் சார்ந்த பகுதி என்பதாலும், குறுகிய (ம) அகலமுள்ள தெருக்களில் சேகரம் செய்யப்படும் குப்பை கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகள், மரக்கழிவுகளை அகற்ற மிகவும் சிரமமாக இருப்பதால், தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக கீழ்க்கண்ட விபரப்படியான (BOB CAT) வாகனத்தினை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்..12609/2020/எல்ஏ.3, நாள்.. 17.10.2020ன்படி, $15^{th}$ CFC Tied Grant-ன் கீழ் முதற்கட்டமாக 2020–2021–ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th rowspan="2">S.No</th><th rowspan="2">Total Grant Allocation (In Rupees)</th><th colspan="2">Under Municipal Solid Waste Management</th></tr>
<tr><th>Name of the works</th><th>Amount (Rs. in Lakhs)</th></tr>
<tr><td>1.</td><td>11277443-</td><td>Supply and Delivery of BOB CAT</td><td>23.00</td></tr>
<tr><td></td><td></td><td>Total …</td><td>23.00</td></tr>
</table>

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்றிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்..3672/2020/இ1) |

**தீர்மானம் எண்..8 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..9</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு எண்..31 லெட்சத்தோப்பு வீட்டு வசதி வாரிய ஆணையர் குடியிருப்பில் வண்ணம் பூசி புதுப்பித்திடவும், மின் இணைப்பு, சுற்றுச்சுவர் உயர்த்துதல் மற்றும் Aluminium door பொருத்தும் பணிக்கும் 16.12.2020அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி விகிதம் (மதிப்பீட்டை விட)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">வார்டு எண்..31 லெட்சத்தோப்பு வீட்டு வசதி வாரிய ஆணையர் குடியிருப்பில் வண்ணம் பூசி புதுப்பித்திடவும், மின் இணைப்பு சுற்றுச்சுவர் உயர்த்துதல் மற்றும் Aluminium door பொருத்தும் பணிகள்.</td><td rowspan="2">ரூ.5,00,000/–</td><td>எஸ்.கணேசன், பட்டுக்கோட்டை</td><td>0.25% குறைவு</td></tr>
<tr><td>கே.எடிசன், பட்டுக்கோட்டை</td><td>1.51% அதிகம்</td></tr>
</table>

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்வொப்பந்தப்புள்ளியானது திரு.கே.எடிசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினைவிட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்..2992/2020/இ1) |

**தீர்மானம் எண்..9 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..10</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி துாய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் 2018–19 நகராட்சி உரக்கிடங்கில் Bio mining அமைக்கும் பணிக்கு M/s.Allwin Dumpyard Segregation, Chennai என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக ந.க.எண்..1986/2018/இ1, நாள்.. 7.11.2018ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி உரக்கிடங்கில் Bio mining பணிகள் போதிய இயந்திரங்கள் முழுமையாக நிறுவப்படாமலும், வைபரேட்டர் போன்றவை கடந்த 15.05.2019க்குள் நிறுவியவுடன் பணிகளை துரிதப்படுத்துவதாக கூறி நாளது தேதி வரை இயந்திரங்களை முழுமையாக நிறுவுவதற்கு எவ்வித முயற்சியும், ஈடுபாடும் காட்டாமல் மெத்தனமாக மேற்கண்ட நிறுவனம் இருந்துவந்துள்ளது.

இப்பணிகள் அரசின் திட்டப்பணிகள் என்பதனால் தேசிய பசுமை தீர்ப்பாய அறிவுரைகளின்படி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பணிகள் முடித்து அரசிற்கு அறிக்கை அனுப்பும் சூழ்நிலை உள்ளதாலும், இப்பணியினை விரைவில் முடித்திட அறிவுறுத்தி அந்நிறுவனத்தாருக்கு பல்வேறு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இதைத் தவிர பல கடிதங்களிலும் பதிவு அஞ்சல் கடிதங்களிலும் அன்னாரால்
தெரிவிக்கப்பட்ட முகவரி இல்லை என்பதால், தவறான முகவரி என தெரிவிக்கப்பட்டு, திரும்ப நகராட்சி அலுவலகத்திற்கு கடிதங்கள் திருப்பப்பட்டுள்ளது.

மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டும், ஒப்பந்தக்காலம் முடிவடைந்த நிலையில், பணியினை முடித்து தராமல் இவ்வொப்பந்த நிறுவனம் இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டங்களில் இந்நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுகின்றது. மேற்படி நிறுவனம் இயந்திரங்களை முழுமையாக நிறுவி, கையாளக்கூடிய கழிவுகளை கலந்தாலோசகராக நியமிக்கப்பட்ட பேராசிரியர், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை அவர்களின் அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு கழிவுகள் அகற்றப்பட வேண்டும் எனவும், அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி 1) தினசரி இயக்கப்படும் இயந்திரங்களின் விபரம் 2) கழிவுகளை கையாண்ட கொள்ளளவு 3) நகராட்சியால் வழங்கப்பட்ட மும்முனை மின்இணைப்பின் பயனீட்டு அளவு 4) கழிவுகளிலிருந்து பெறப்பட்ட Fine Soil (or) Manure, Coarse Soil, RDF, Glass, Inerts ஆகியவற்றை எந்தந்த விற்பனையாளர்களிடம் விற்பனை செய்ய ஒப்பந்ததாரரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை உரிய பதிவேடுகள் மூலம் பராமரிக்கவும் 5) தினசரி அறிக்கையினை நகராட்சி பொறியாளரிடம் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மேலும் இந்நிறுவனத்திற்கு பல்வேறு அறிவிப்புகள் வழங்கப்பட்ட நிலையில் எவ்வித செயல்திட்டத்துடன் கூடிய விளக்கமும் அளிக்காமல் பணியினை விரைந்து முடித்திட எவ்வித முயற்சியும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவது மிகவும் கண்டனத்திற்குரியதாகும். இந்நிலையில் 19.2.2020 அன்று அண்ணா பல்கலைக் கழக தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆய்வு

மேற்கொண்டதில் மிக குறைந்த அளவிலான சுமார் 1850 Cum கழிவுகள் மட்டுமே கையாளப்பட்டுள்ளது என தெரியவருகிறது. எனவே அவ்வல்லுநர்கள் அறிவுறுத்தியவாறு தினந்தோறும் 250 Cum குப்பை கழிவுகள் கையாளும் வகையில், கூடுதலாக பணியாளர்களை நியமித்தும், கூடுதல் இயந்திரங்களை முபமையாக உட்படுத்தியும், Bio mining பணியினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேலும் தினசரி பணியினை மேற்கொண்ட விபரத்தினை ஒப்பந்ததாரர் அவர்கள் நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரிடம் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டிருந்தும், கூடுதல் பணியாளர்களைக் கொண்டு பணியினை துரிதப்படுத்துவதாலும், இரு ஷிப்ட் அடிப்படையில் (இரவு பகலாக) பணி மேற்கொள்ள திட்டமிட்டதாக கூறிவந்த இந்நிறுவனம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் தொடர்ந்து மெத்தனமாக இருந்து வந்துள்ளது. இதனால் பணியினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்படாமல் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதுடன், களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு இந்நிறுவனம் செயல்பட்டு வந்துள்ளது. மேலும் இந்நிறுவனம் மிக ஆமை வேகத்தில் பணி மேற்கொண்டால், இனி ஓராண்டு ஆனாலும் பணி முழுவதுமாக முடிக்க இயலாது என தெரியவருகிறது. மேலும் இந்நிறுவன முகவரிக்கு அனுப்பப்படும் இவ்வலுவலக அறிவிப்பு கடிதமானது சரியான முகவரிக்கு சென்றடையாமல், மீண்டும் இவ்வலுவலகத்திற்கு திருப்பப்படுகிறது. இதனால் அந்நிறுவன முகவரி மற்றும் பணியின் ஸ்திரத்தன்மை குறித்து கேள்விக்குறியாகவே இருந்து வந்த நிலையில் தேசிய பசுமை தீர்ப்பாணையத்தின் (National Green Tribunal (NGT) கண்காணிப்பில் இப்பணி வருவதால், போதிய பணி முன்னேற்றம் அடைய வேண்டிய நிலையில், மேற்படிஒப்பந்ததாரரை அணுகியபோது, ஒப்பந்ததாரர் தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அவரால் இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள இயலவில்லை என 20.01.2021 அன்று சம்மதக் கடிதம் அளித்துள்ளார்.

இதனடிப்படையில் M/s.Allwin Dumpyard Segregation, Chennai என்ற நிறுவனத்திற்கு 07.11.2018–ல் வழங்கப்பட்ட பணி உத்தரவை மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ரத்து செய்யவும், இப்பணிக்காக நகராட்சி நிர்வாகமானது செலவிடப்பட்ட செலவினங்களாகிய Bio mining பணிக்கான கலந்தாலோசகர் நியமனத்திற்கான கட்டணம், விளம்பர கட்டணங்கள், இது தொடர்பான இதர செலவினங்கள் அனைத்தையும் அன்னாரது முன் வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்வதற்கும், ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களிடம் 31.8.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, இப்பணியின் அவசர, அவசியம் கருதி தொய்வின்றி Bio mining பணியினை மேற்கொள்ளவும், மேலும் எதிர்வரும் சட்டமன்ற தேர்தலைக் கருத்திற்கொண்டு, Code of conduct அறிவிப்பு அரசால் அறிவிப்பதற்கு முன்னதாகவே இப்பணியினை மறு ஒப்பந்தப்புள்ளி கோர ஏதுவாக குறுகிய கால ஒப்பந்தப்புள்ளியாக ஒப்பந்தம் கோரிட (15 நாட்கள் கொண்ட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பாக கோரிட) எஞ்சிய 43398 cum திடக்கழிவுகளை Bio mining முறையில் ரூ.285.00லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கையேட்டில் அத்தியாம்–V, Clause 20(2)ல் தெரிவித்துள்ளவாறு, குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பிடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
|---|---|
| | 2) ஒப்பந்த விதிகளின்படி 7.11.2018 அன்று M/s.Allwin Dumpyard Segregation, Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை ரத்து செய்யலாம். |
| | 3) பணியின் அவசர, அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.. 1986/2018/இ1) |

**தீர்மானம் எண்..10 .. அலுவலக குறிப்புஅனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..11**

பட்டுக்கோட்டை நகராட்சி 2020–2021 சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் (SRP) சாலைப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்..20557/2020/இ3, நாள்.. 11.12.2020ல் மதிப்பீட்டு தொகை ரூ. 1000.00 இலட்சத்திற்கு / 5 சிப்பங்களாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்..556, நாள்.. 14.12.2020ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து முதன்மை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்..23659/2020–17/DO2, நாள்..21.12.2020–ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பட்டுக்கோட்டை நகரில் வார்டு எண்கள்..1,4,5,6,10,11,12,13,14,15,18,19,23,24,25,27,28,29,30,31,32 மற்றும் 33 ஆகிய வார்டு பகுதிகளில் சிறப்பு சாலைகள் மேம்பாடு செய்யும் பணிக்கு 11.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | சிப்பம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|---|
| 1) | I | ஆர்.கணேசன், லெம்பாலக்குடி. | மதிப்பீட்டை விட 9.96 % அதிகம் |
| 2) | I | கே.ஆர்.என் & கோ, முத்தையான்பட்டி | மதிப்பீட்டை விட 16.167% அதிகம் |
| 3) | II | ஆர்.கணேசன், லெம்பாலக்குடி. | மதிப்பீட்டை விட 10.04% அதிகம் |
| 4) | II | கே.ஆர்.என் & கோ, முத்தையான்பட்டி | மதிப்பீட்டை விட 17.54% அதிகம் |
| 5) | III | பி.கருப்பையா, குளந்திரான்பட்டி | மதிப்பீட்டை விட 6.01% அதிகம் |
| 6) | III | பி.சின்னப்பன், புதுக்கோட்டை | மதிப்பீட்டை விட 15.50% அதிகம் |
| 7) | IV | ஆர்.கணேசன், லெம்பாலக்குடி. | மதிப்பீட்டை விட 45.00% அதிகம் |
| 8) | IV | கே.ஆர்.என் & கோ, முத்தையான்பட்டி | மதிப்பீட்டை விட 53.18% அதிகம் |
| 9) | V | பி.கருப்பையா, குளந்திரான்பட்டி | மதிப்பீட்டை விட 6.10% அதிகம் |
| 10) | V | பி.சின்னப்பன், புதுக்கோட்டை | மதிப்பீட்டை விட 15.64% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற பத்து ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ள மதிப்பீட்டைவிட அதிகத்தில் – குறைவான விலை விகிதமும், செய்துள்ள சிப்பம் 1, 2 மற்றும் 4–க்கு திரு.ஆர்.கணேசன், லெம்பாலக்குடி, சிப்பம் 3 மற்றும் 5க்கு பி.கருப்பையா, குளந்திரான்பட்டி ஆகியோர்களுக்கு தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தருமாறு 13.1.2021 அன்று அறிவிப்பு கடிதம் அளிக்கப்பட்டது. அதன்பேரில், திரு.ஆர்.கணேசன், லெம்பாலக்குடி மற்றும் திரு.பி.கருப்பையா, குளந்திரான்பட்டி ஒப்பந்ததாரர்கள் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து விலைக் குறைப்பு செய்து சம்மத கடிதம் கொடுத்துள்ளனர். அதன்அடிப்படையில் திருத்திய மறு ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | சிப்பம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|---|
| 1. | I | ஆர்.கணேசன், லெம்பாலக்குடி. | 4.93 அதிகம் |
| 2. | II | ஆர்.கணேசன், லெம்பாலக்குடி. | 4.94 அதிகம் |
| 3. | III | பி.கருப்பையா, குளந்திரான்பட்டி | 4.96 அதிகம் |
| 4. | IV | ஆர்.கணேசன், லெம்பாலக்குடி. | 4.96 அதிகம் |
| 5. | V | பி.கருப்பையா, குளந்திரான்பட்டி | 4.94 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை 5 சதவீதத்திற்கு குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள சிப்பம் 1, 2 மற்றும் 4—க்கு திரு.ஆர்.கணேசன், லெம்பாலக்குடி , சிப்பம் 3 மற்றும் 5க்கு பி.கருப்பையா, குளந்திரான்பட்டி ஆகியோர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகராட்சி பொறியியல் கையேட்டின் விதி எண்..2.7.2—ல் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் மதிப்பீட்டைவிட கூடுதலாக பணி மேற்கொள்ள தெரிவித்துள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட சதவீதத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..3008/2020/இ1) |

**தீர்மானம் எண்..11 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..12</u>**

ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம் (IUDM) 2020—2021—ன்கீழ் சாலைகள் மேம்பாடு செய்திடும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை Puratchi Thalaivi & Namadhu Amma நாளிதழ்களில் 19.09.2020 அன்று பிரசுரம் செய்த வகையில் (பில் எண்..1861, நாள்.. 19.09.2020) பட்டியல் தொகை ரூ.40,478/—ஐ Eyedea Brand Solutions, Chennai நிறுவனத்தாருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பானது பிரசுரம் செய்யப்பட்டதன் பொருட்டு பட்டடியல் தொகை ரூ.40,478/—ஐ மேற்படி நிறுவனத்தாருக்கு வழங்கும் பொருட்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..138/2020/இ1) |

**தீர்மானம் எண்..12 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..13</u>**

இந்நகராட்சி அலுவலக வாகனம் T.N.49AZ.4890-ல் பழுதுகள் ஏற்பட்டு வண்டி இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், மேற்படி வாகனம் பொறியியல் பிரிவில், பொறியாளரால் தினசரி குடிநீர் விநியோகம், தெரு விளக்கு பராமரிப்பு திட்டப்பணிகள் நேராய்வு, மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் இதர அலுவல் சார்ந்த பணிகளுக்கு செல்ல வேண்டிய காரணத்தால் அவசர, அவசியம் கருதி பழுதுகள் சீர் செய்து மீண்டும் இயக்கும்பொருட்டு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.60,000/–க்கு அனுமதியும், மேற்படி பழுதுகள் மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான SRI ARN MOTORS,THANJAVUR மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு : | 1) வருவாய் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம் . |
| | 2) அவசர, அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..8048/2006/இ1 |

**தீர்மானம் எண்..13 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..14</u>**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19ன் கீழ் பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்த LED விளக்குகள் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை ந.க.எண்..1306/2018/அ2, நாள்..22.12.2018ல் வழங்கிய நிர்வாக அனுமதியின் அடிப்படையில் வழங்கப்பட்ட பணி உத்தரவு ந.க.எண்..6128 நாள்.. 31.01.2019–ஐ ரத்து செய்திடவும், தற்போது திருத்திய நிர்வாக அனுமதி கீழ்க்கண்ட விபரப்படி தஞ்சாவூர், மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ந.க.எண்..1306/2018/அ2, நாள்..7.01.2021ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் பேரில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பட்டுக்கோட்டை நகராட்சி, தஞ்சாவூர் பைபாஸ் சாலை அருகில் LED விளக்குகள் அமைத்தல். | 4.00 |
| 2. | பட்டுக்கோட்டை நகராட்சி, மன்னார்குடி பைபாஸ் சாலை அருகில் LED விளக்குகள் அமைத்தல். | 4.00 |
| 3. | பட்டுக்கோட்டை நகராட்சி, பாப்பாவெளிப்பாளையக்கோட்டை பைபாஸ் பகுதியில் LED விளக்குகள் அமைத்தல். | 4.00 |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு : | மன்றம் அனுமதிக்கலாம் . (ந.க.எண்.. 6218 /2016/இ1) |

**தீர்மானம் எண்..14 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..15**

பட்டுக்கோட்டை நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு 2020–2021 ஒதுக்கீட்டின் கீழ் குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்..567, நாள்.. 29.12.2020ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி, அவ்வப்போது குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்படுவதாலும், பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் பணியின் முக்கியத்துவம் கருதியும், எதிர்வரும் சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகளை எதிர்நோக்கியும், பணியின் அவசர, அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை விரைந்து முடித்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வலுவலக ந.க.எண்..3672/21020/இ1, நாள்..12.1. 2021–ல் மேற்படி பணிகளுக்கு திருத்திய மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்டவாறு உள்ள பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடகளுக்கு 15th CFC 2020-2021-ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து செலவிடவும், பணியின் அவசர, அவசியம் கருதி மேற்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | Replacement of D.I Pumping Main from Mattusandai Head works to BSNL office at Pattukkottai Municipality in Ward No.9 (Reach-I ) | 20.00 |
| 2. | Replacement of D.I Pumping Main from BSNL office to Sunnambukkara street in Pattukkottai Municipality Ward No.9 (Reach-II) | 20.00 |
| 3. | Replacement of D.I Pumping Main from Sunnambukkara street to Kasankulam OHT campus in Pattukkottai Municipality in Ward No.13 (Reach-III ) | 20.00 |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் அனுமதி வழங்கலாம் .<br>(ந.க.எண்.. 3672/2020/இ1) |

**தீர்மானம் எண்.. 15 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..16**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட உரக்கிடங்கு வளாக பகுதியில் உள்ள MCC-ல் இயங்கி வரும் Shredding Machine-க்குரிய Conveyor Belt சேதமடைந்துள்ளதால் புதியதாக Conveyor Belt கொள்முதல் செய்து பொருத்திட ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.28,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், இப்பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் செய்திடவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) மன்றம் அனுமதிக்கலாம் . |
| | 2) பணியின் அவசர, அவசியம் கருதி ஆணையர்/தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கும் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.. 3447/2020/இ1) |

**தீர்மானம் எண்..16 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..17</u>**

தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பட்டுக்கோட்டை நகராட்சி பகுதிகளில் தனியார் நிறுவனம் மூலம் நாள்தோறும் உருவாகும் கழிவுகளை ஆய்வு செய்து நாள்தோறும் உருவாகும் கழிவுகளின் அளவு, பகுப்பாய்வு செய்து அதில் உள்ள பொருட்களின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றை தனித்தனியே அளவீடு செய்து அறிக்கை அனுப்ப தெரிவித்ததன் அடிப்படையில், தனியார் நிறுவனத்தை இப்பணிக்கு ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும், தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்வதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.. 961/2019/‘எச்1) |

**தீர்மானம் எண்..17 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..18</u>**

அரசாணை எண்..166, நாள்.. 23.11.2016—ன்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் 14 எண்ணிக்கை மற்றும் 4 எண்ணிக்கை அரசு பள்ளிகளில் உள்ள கழிவறைகள், பள்ளி வளாகங்களில் தினசரி தூய்மை பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக் குழுவான பனிமலர் குழு மூலம் 20 நபர்கள் கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தினக்கூலி அடிப்படையில் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..61, நாள்.. 30.3.17ன்படியும், நகர்மன்ற தீர்மான எண்..370, நாள்..28.3.2018ன்படியும், அனுமதி வழங்கிய உரிம காலம் 31.3.19 உடன் முடிவடைந்த நிலையில் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..62, நாள்.. 31.05.19ன்படி 31.03.2020 முடிய அனுமதி காலம் முடிவடைந்ததாலும், மேலும் 28.03.2020 முதல் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக அரசு உத்திரவு மூலம் பள்ளிகள் மூடப்பட்டது. தற்பொழுது 10 மற்றும் 12ம் வகுப்பு உள்ள பள்ளிகள் மட்டும் நடைபெறும் என அரசால் உத்தரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சி பகுதியில் உள்ள 3 அரசு மேல்நிலை பள்ளிகளில் மட்டும் தூய்மைப்பணி மற்றும் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதால், ஏற்கனவே பணி செய்து வந்த பனி மலர் சுய உதவிக்குழு மூலம் 5 நபர்களை 3 பள்ளிகளுக்கு 19.01.2021 முதல் 31.03.2021 முடிய மூன்று மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளவும், உரிமத்தினை நீட்டிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்..8792/2016/எச்1) |

**தீர்மானம் எண்..18 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..19</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் செயல்படுத்தப்படும் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சி, டெங்கு, சிக்குன் குனியா காய்ச்சல் தடுப்பு பணிகள், திடக்கழிவு பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை பணிகள், உரம் தயார் செய்யும் பணிகள் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு குடிசை பகுதிகளில் விழிப்புணர்வு நாடகம் நடத்துவதற்கு கிருஷ்ணகுமார் தஞ்சை கலைமகள் நாடக மன்றம், தஞ்சாவூர் நிறுவனம் அளித்துள்ள கடிதத்தின்படி ஒரு நாடகத்திற்கு ரூ.5000/– (அனைத்து செலவுகள்) ஒரு நாளைக்கு 3 நாடகம் நடத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ.15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் . |
| | 2) செலவினத்தினை தூய்மை இந்தியா திட்டம் IEC நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.. 3709/17/எச்1) |

**தீர்மானம் எண்..19 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..20</u>**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் மூலம் உரம் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மக்காத குப்பைகளை அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டு மறு சுழற்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இந்நகராட்சி பகுதியில் இயங்கும் கோழிக்கடை கழிவுகளை அப்புறப்படுத்துவதில் சிரமமான சூழ்நிலை உள்ளதாலும், கோழிக்கடை கழிவுகளை தாங்களே எடுத்துக் கொள்வதற்கு சம்மதம் வேண்டி JKR Marine Products,Oralvaimozhi(Po), Erukkandurai Village, Radhapuram Taluk, Tirunelvelli-627116–ல் உள்ள நிறுவனம் விண்ணப்பம் செய்துள்ளதன் அடிப்படையில் இது தொடர்பான ஆலோசனை கூட்டம் 27.01.2021–ம் தேதி நகராட்சி ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்நகராட்சி துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் ஆகியோர்களால் ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில் விலையில்லாமல் கோழி கழிவுகளை அகற்றுவதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனத்தார் மூலம் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு..** | மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..364/2021/எச்1) |

**தீர்மானம் எண்..20 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..21</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.. டி.என்.49C0051 டிப்பர் லாரி வாகனத்திற்கு இரண்டு முன்பக்க டயர்கள் சப்ளை செய்வதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ. 20,000–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி மேற்கண்ட வாகனத்தின் பணியினை உடன் மேற்கொண்டு வாகன பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 20,000/— ஐ பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.. 270/2021/எச்1) |

**தீர்மானம் எண்.. 21 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..22</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.. டி.என்.49C0051 டிப்பர் லாரி வாகனத்திற்கு இரண்டு முன்பக்க டயர்கள் சப்ளை செய்வதற்கு 22.01.2021—ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1. | பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.. டி.என்.49C0051 டிப்பர் லாரி வாகனத்திற்கு இரண்டு முன்பக்க டயர்கள் சப்ளை செய்யும் பணி. | 20,000— | ஸ்ரீ டயர்ஸ், 19, பண்ணவயல் ரோடு, பட்டுக்கோட்டை | ரூ.17,900/— |
| | | | ஆர். கே.டயர்ஸ், 121, அறந்தாங்கி ரோடு, பட்டுக்கோட்டை | ரூ.18,300/— |
| | | | அம்மன் டயர்ஸ் 160, அறந்தாங்கி ரோடு பட்டுக்கோட்டை | ரூ.18,200/— |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) அன்றாட பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி, முன் அனுமதி பெற்று வாகனத்திற்கு 2 டயர்கள் சப்ளை செய்யும்பொருட்டு பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..270/2021/எச்.1) |

**தீர்மானம் எண்..22 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..23**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து வார்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பர நோட்டீஸ் மற்றும் பிளக்ஸ் போர்டு நகரின் முக்கிய பகுதிகளில் வைப்பதற்கு 13.01.2021–ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து வார்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பர நோட்டீஸ் மற்றும் பிளக்ஸ் போர்டு நகரின் முக்கிய பகுதிகளில் வைத்தல்.<br>1) விளம்பர நோட்டீஸ் அ4 சைஸ் = 30000 எண்ணிக்கை<br>2) விளம்பர பிளக்ஸ் 6 x 4 = 60 எண்ணிக்கை<br>3) விளம்பர பிளக்ஸ் 10 x 10 = 10 எண்ணிக்கை | 70,000– | வாசன் பிரிண்டர்ஸ், ரயில்வே ஸ்டேஷன் ரோடு, பட்டுக்கோட்டை | ரூ.66,000/– |
| | | | ஸ்ரீ.வெங்கடேஸ்வரா பிரிண்டர்ஸ், போஸ்டாபீஸ் ரோடு, பட்டுக்கோட்டை | ரூ.71,500/– |
| | | | சரவணா பிரிண்டர்ஸ், தேரடித் தெரு, பட்டுக்கோட்டை | ரூ.71,500/– |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) அன்றாட பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி, முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்யும் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..060/2017/எச்.1) |

**தீர்மானம் எண்.. 23 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..24**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து வார்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 3 எண்ணம் மைக்செட்டுடன் கூடிய ஒலிபெருக்கி விநியோகம் செய்வதற்கு 13.01.2021–ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | விலைப்புள்ளி தொகை ஒன்றின் விலை |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து வார்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 3 எண்ணம் மைக்செட்டுடன் கூடிய ஒலிபெருக்கி விநியோகம் செய்தல். | 20,000– | சன் எலக்ட்ரானிக்ஸ், 101, தலையாரித் தெரு, பட்டுக்கோட்டை. | ரூ.6,500/– |
| | | | யுனிவர்சல் எலக்ட்ரானிக்ஸ், 123, தலையாரித் தெரு, பட்டுக்கோட்டை. | ரூ.6,750/– |
| | | | A Star எலக்ட்ரானிக்ஸ், 61,தலையாரித் தெரு, பட்டுக்கோட்டை. | ரூ.7,100/– |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) அன்றாட பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி, முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்யும் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..060/2017/எச்.1) |

**தீர்மானம் எண்..24 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்..25</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து வார்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நகரின் முக்கிய பகுதிகளில் நாடகம் நடத்துவதற்கு 13.01.2021–ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | விலைப்புள்ளி தொகை நாடகம் ஒன்றிற்கு |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து வார்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நகரின் முக்கிய பகுதிகளில் நாடகம் நடத்துதல். | 7,000– | அன்னை கம்சலை தொண்டு நிறுவன கலைக்குழு, தஞ்சாவூர். | ரூ.5,000/– |
| | | | ஜெய்கிருஷ்ணன் கிராமிய கலைக்குழு, எண்..18/7, முதல் தெரு, டவுன் கரம்பை, கீழவாசல், தஞ்சாவூர். | ரூ.6,500/– |
| | | | நம்பிக்கை நட்சத்திர கலைக்குழு, எண்..20/12, நடுத் தெரு, உறையூர்–12. | ரூ.6,700/– |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) அன்றாட பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி, முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்யும் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..060/2017/எச்.1) |

**தீர்மானம் எண்.. 25 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**